[30th March 1961

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்யத்தில் இருந்து வரும் ஸ்பின்டில்கள் போதுமானவையாக இருக்கின்றனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : போதாது.

SRI A. A. RASHEED : May I know whether spindles are allotted on the basis of population or on the basis of need and backwardness of the region ?

THE HON. SRI R. VENKATARAMAN : The question has to be addressed to the Government of India.

Veterinary hospitals

* 1185 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் வடாற்காடு ஜில்லாவில் இதுவரை திறக்கப்பட்டுள்ள கால்நடை வைத்திய நிலையங்கள், முதலுதவி நிலையங்கள் எத்தனை, தாலூகா வாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Two Veterinary First Aid Centres, one at Ponnai and the other at Vanghur, have been opened in the North Arcot district and they are functioning with effect from 3rd May 1960. No Veterinary Hospital or Veterinary Dispensary has been opened in the district during the period.

A statement [a] showing the number of Veterinary Hospitals, Vetrinary Dispensaries, Minor Veterinary Dispensaries and First Aid Centres now functioning in North Arcot district is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், குடியாத்தம் தாலூகாவில் பேரணாம்பட்டு என்ற இடத்திலும், ஆந்திராவிலிருந்து புதிதாக சேர்ந்திருக்கும் பரதராமி என்ற இடத்திலும் அதிகமான கால்நடைகள் இருப்பதால், அவைகளுக்கு ஏதாவது சிகிச்சை செய்யவேண்டுமென்றால் 10, 15 மைல் தூரம் போக வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த இரண்டு இடங்களிலும் டிஸ்பென்ஸரியோ அல்லது ஆசுபத்திரியோ ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது இருக்கின்றவை எல்லாம் போதாது. மேற்கொண்டு எந்தெந்த இடங்களில் எல்லாம் தேவையோ அந்த இடங்களில் எல்லாம் கால்நடை ஆசுபத்திரிகளை நிறுவுவதற்கு உடனடியாக நிதிநிலைமை இடம் கொடுக்கவில்லை. இதோடு உள்ளூரில் எவ்வளவு ஒத்துழைப்பு கிடைக்கிறதோ, அதைப்பொறுத்தும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

Fertilizers

* 1186 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாக உரங்கள் உற்பத்தி செய்வதற்காக 1959, 1960-ம் வருடங்களிலே எவ்வளவு தொகை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டது ?

(இ) என்னென்ன வகையான உரங்கள், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டன ?

(உ) மத்திய சர்க்காரால் வழங்கப்பட்ட உதவித்தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [b] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix II on pages 526–527 infra.
[b] Printed as Appendix III on page 528 infra.